# பள்ளி நடைமுறை விதிகள்

பள்ளியில் சேர்தல் :

ஆறாம் வகுப்பிற்குச் சேரும் மாணவர்கள் 10 வயது பூர்த்தி செய்தவராக இருத்தல் வேண்டும். பொதுவாகப் பன்னிரண்டு வயதிற்கு மேற்பட்டவர்கள் ஆறாம் வகுப்பில் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள். மற்ற வகுப்பில் சேர்த்துக்கொள்ளப்படும் மாணவர்கள் மேற்படி வயதை ஒட்டியே கணக்கிட்டுச் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். மாணவர்களை நேரில் பார்வையிட்ட பின்னரே சேர்த்துக் கொள்ளப்படுவர். மாணவர்கள் சேரும் போது பெற்றோர்களும் வர வேண்டும். பெற்றோர்கள் இல்லையெனில் காப்பாளர்களின் பொறுப்புநிலை அறிந்த பின்னரே ஒப்புக் கொள்ளப்படுவர்.

மற்ற உயர்நிலைப்பள்ளிகளில் இருந்து வரும் மாணவர்கள் மாற்றுச் சான்றிதழையும் (Transfer Certificate) ஆரம்ப அல்லது நடுநிலைப்பள்ளிகளில் இருந்து வரும் மாணவர்கள் தேர்ச்சி அறிக்கையையும் (Record Sheet) கொண்டு வரவேண்டும்.

பள்ளிக்கல்வி ஆண்டு ஜூன் முதல் டிசம்பர் வரை பெரும்பிரிவு (Long Term) எனவும், ஜனவரி முதல் ஏப்ரல் வரை சிறு பிரிவு (Short Term) என்றும் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்படும்.

பள்ளியிலிருந்து மாற்றுச்சான்றிதழ் (T.C) பெற விரும்பும் மாணவர்கள், பெற்றோர்களிடமிருந்தோ பெற்றோர் இல்லையெனில், பாதுகாப்பளரிடமிருந்தோ விண்ணப்பம் பெற்று வரவேண்டும். மாற்றுச் சான்றிதழ் பெறும் முன்னர் மாணவன் பள்ளிக்குச் செலுத்த வேண்டிய கட்டணங்களோ, நிலுவைகளோ இருந்தால் அவைகள் செலுத்தப்பட்ட பின்னரே மாற்றுச் சான்றிதழ் வழங்கப்படும்

பள்ளியில் வழங்கப்பட்ட மாற்றுச் சான்றிதழ் இழக்கப்பட்டால் மாற்றுச்சான்றிதழ் நகல் (Duplicate) சாதாரணமாகக் கொடுப்பதில்லை. மூல இதழ் இழக்கப்பட்டதற்குப் போதிய சான்றுகள் இருப்பின் "மீண்டும் கிடைப்பதற்கின்றி இழக்கப்பட்டது" (Lost Beyond Recover) எனத் தாசில்தார் அத்தாட்சியோடு விண்ணப்பம் செய்து ஒரு ரூபாய் கட்டணம் செலுத்தினால் மட்டுமே சான்றிதழின் பிரதி (Duplicate) கொடுக்கப்படும்.

மாணவர்கள் நான்கு நாட்களுக்கு மேல் விடுப்பில் செல்ல விரும்பினால் தகுந்த காரணங்களுடன் பெற்றோரிடமிருந்து விண்ணப்பம் வந்தால் தான் விடுப்பு வழங்கப்படும். ஒன்பது முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரையுள்ள மாணவ, மாணவிகள் பள்ளி வேலை செய்யும் ஒவ்வொரு பருவத்திற்கும் 100-க்கு 75 நாட்கள் வருகை தரவேண்டும்.

சிறு விடுப்புக்கு விண்ணப்பிக்கும் மாணவர்களுடைய விண்ணப்பங்களில் பெற்றோர் ஒப்புதலுடன் கையொப்பமும் வேண்டும்.

பள்ளியில் பயிலும் எல்லா மாணவர்களுக்கும் கட்டாய உடற்பயிற்சி உண்டு. ஒன்பது முதல் பன்னிரண்டு வரை பயிலும் மாணவர்கள் 75 சதவிகிதத்திற்கு குறையாமல் உடற்பயிற்சி வகுப்பிற்கு வரவேண்டும். இவ்வகுப்பில் கலந்து கொள்ள இயலாதோர் தலைமை ஆசிரியர் வழியாக மாவட்டக் கல்வி அலுவலர் அவர்களுக்கு விண்ணப்பித்து விலக்குப் பெறவேண்டும்.

பொதுவானவை :

தொடக்க மணி காலை இறைவழிபாட்டிற்கு 9.00க்கு ஒலிக்கப்படும். மாணவர்கள் தொடக்க மணிக்கு முன்னதாகவே தத்தம் வகுப்புகளில் அமர வேண்டும். இறைவழிபாட்டின் பொழுது மாணவர்கள் அமைதியாக இருந்து வழிபாட்டினை முடிக்க வேண்டும்.

காலதாமதமாக வரும் மாணவர்கள் தங்கள் கையேட்டில் தாமத வருகையைப் பதிவு செய்து கொண்டு தலைமை ஆசிரியர் அனுமதி பெற வேண்டும். அனுமதி பெற்ற பின்னரே அவர்கள் வகுப்பில் அனுமதிக்கப்படுவர். பள்ளி நாட்களில் விடுப்பு வேண்டும் எனில் பெற்றோர் அல்லது காப்பாளரிடமிருந்து கையொப்பமிட்ட விண்ணப்பத்தை வகுப்பு ஆசிரியருக்கு அனுப்புதல் வேண்டும். மூன்று நாட்களுக்கு மேற்பட்ட விடுப்புகள் தேவையாயின் தலைமை ஆசிரியருக்கு விண்ணப்பிக்க வேண்டும். நோயின் காரணமாக விடுப்புக் கோரும் மாணவர்கள் மருத்துவச் சான்றிதழையும் இணைத்து விடுப்புக்கு விண்ணப்பித்தல் வேண்டும்.

தலைமை ஆசிரியரின் அனுமதி பெறாதவர்களும், பெற்றோர் அல்லது காப்பாளர்களுக்குப் பதில் பொய்க் கையொப்பமிட்டவர்களும், பொய்க்காரணம் காட்டியவர்களும் தண்டிக்கப்படுவர்.